James McGranahan, 1840-1907



பாமாலை 189 அருள் ஏராளமாய்

1 அருள் ஏராளமாய்ப் பெய்யும்
உறுதி வாக்கிதுவே
ஆறுதல் தேறுதல் செய்யும்
சபையை உயிர்ப்பிக்குமே

Refrain

அருள் ஏராளம்
அருள் அவசியமே
அற்பமாய்ச் சொற்பமாய் அல்ல
திரளாய்ப் பெய்யட்டுமே

2 அருள் ஏராளமாய்ப் பெய்யும்
மேக மந்தாரமுண்டாம்
கடனை நிலத்திலேயும்
செழிப்பும் பூரிப்புமாம்

3 அருள் ஏராளமாய்ப் பெய்யும்
இயேசு வந்தருளுமேன்
இங்குள்ள கூட்டத்திலேயும்
கிரியை செய்தருளுமேன்

4 அருள் ஏராளமாய்ப் பெய்யும்
பொழியும் இச்சணமே
அருளின் மாரியைத் தாரும்
ஜீவ தயாபரரே